2018 ஜூன் 28]

(இ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழு. பொதுக் கணக்குக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 203—ன்கீழ், 2018—2019 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழு. பொது நிறுவனங்கள் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 211—ன்கீழ், 2018—2019 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.